
முச்சந்தி முரளி



“கண்கெட்ட பிறகு சூரியநமஸ்காரம் செய்தமாதிரி இருக்கு உவையின்ர மன்னிப்பு”

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 241

புதன்கிழமை
24 ஜூலை 2024

ஆடி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பாதிப்பில்லை

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெளிவுபடுத்தல்

**யாழ்ப்பாணம், ஜூலை 24**

**ஜனாதிபதியால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும் அதனால் ஜனாதிபதித் தேர்தலுக்கு எந்தவொரு பாதிப்பும் இல்லை. அதேவேளை 22ஆம் திருத்தச் சட்டம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருப்பதால் ஜனாதிபதித் தேர்தல் பிற்போடப்படமாட்டாது. இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, ‘உதயன் பத்திரிகை அலுவலகத்தில்’ வைத்து ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.**

11



## ஜனாதிபதித் தேர்தலுக்கான வர்த்தமானி வெள்ளியன்று?

### ஆணைக்குழுவின் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 24

ஜனாதிபதித் தேர்தலுக்கான வர்த்தமானி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வெளியாகும் எனத் தெரியவருகின்றது.

11

## பெரமுனவின் 12 பேர் ரணிலையே ஆதரிப்பர்

கொழும்பு, ஜூலை 24

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பதிலாக வேறு வேட்பாளரை பொது ஜன பெரமுன களமிறக்கினால் கட்சியின் முடிவுக்கு எதிராக செயற்படுவதற்கு மொட்டுக் கட்சியின் 12 மாவட்டத் தலைவர்கள்

11

தேர்தல் அறிவிக்கப்படவுள்ள நிலையில்

## தமிழ் பேசும் சமூகத்திடம் மன்னிப்புக்கோரும் அரசு

கொழும்பு, ஜூலை 24

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தால் உயிரிழந்த முஸ்லிம் சமூகத்தின் ஜனாஸாக்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்யப்பட்டமைக்கு அரசாங்கம் என்ற ரீதியில் முஸ்லிம் சமூகத்திடம் மன்னிப்புக் கோருகிறோம். அத்துடன் 41 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கறுப்பு ஜூலை சம்பவத்துக்கும் தமிழ் மக்களிடம் நாட்டின்

11

## பொது அமைதியைப் பேண முப்படைக்கும் அதிகாரம்

### வழமையான வர்த்தமானி வெளியானது

கொழும்பு, ஜூலை 24

நாட்டின் அனைத்து நிர்வாக மாவட்டங்களிலும் பொதுமக்களின் அமைதியைப் பேணும் நோக்கில், முப்படையினரை கடமைகளில் ஈடுபடுத்துவதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

11



## கறுப்பு ஜூலை கலவரம்: தாயகத்தில் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 24

தமிழ் மக்கள் மனதில் ஆறாத வடுவாகியுள்ள கறுப்பு ஜூலை கலவரத்தின் 41ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழர் தாயகத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற

11

## தீயில் எரிந்த வீடு

முல்லைத்தீவு ஜூலை 24

முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள வீடொன்று நேற்று அதிகாலை தீயில் எரிந்துள்ளது.

11



## வாள்களுடன் சிலர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 24

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தில் வாள்களுடன் சிலரை நேற்றுமுன்தினம் இரவு கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது இவர்களைக் கைது

11



## எல்லை தாண்டிய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 24

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் 2 விசைப்படகுகளைக் கைப்பற்றி, அதிலிருந்த 9 மீனவர்களையும் கடற்படையினர் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுகர்வோராகும் வாக்காளர்கள்



## தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூலை 24**
**தேர்தல் காலங்களில் வேட்பாளர்கள் தானங்களை நடத்தி, பொருள்களை விநியோகித்தல் மற்றும் பல்வேறு சலுகைகளை வழங்குவதனால் வாக்காளர்கள் தற்போது நுகர்வோர்களாக மாறியுள்ளனர்.**

-இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க கவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியல் கல்வியறிவு இன்மையால் வாக்காளர் இவ்வாறு சிக்குகின்றனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு, தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறைச் சட்டம் நிச்சயமாகப் பயன்படுத்தப்படும் .

பணம் இல்லாமல் அரசியல் செய்யமுடியாது. எனினும் பணத்தைப் பயன்படுத்துவதற்கும் ஒரு எல்லை இருக்கவேண்டும்.

இன்று வாக்காளர்களை விலைக்கு வாங்குவதற்குப் பணம் செலவழிக்கப்படுகிறது. ஏதாவது கொடுத்தால்தான் வாக்களிக்கவேண்டும் என்று வாக்காளர் நினைக்கிறார். ஆனால் சுதந்திரமாக மக்கள் வாக்களிக்க அனுமதிக்கவேண்டும் - என்றார். (ச-இ)

## ஐ.ம.சக்தி கூட்டணி ஓகஸ்ட்டில் மலர்வு

கொழும்பு, ஜூலை 24
சஜித் பிரேமதாஸ தலைமையில் புதிய பல கட்சிகள் மற்றும் அமைப்புகளின் இணைவுடன் அமையவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி எதிர்வரும் ஓகஸ்ட் முதல் வாரத்தில் மலரவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன எனவும், ஓகஸ்ட் முதல்வாரத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது எனவும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினமே டலஸ் அழகப்பெரும, சரத் ஹேரத் உள்ளிட்டவர்கள் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இணையவுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்கவும் தமது அமைப்பு சகிதம் இக்கூட்டணியில் இணைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-44)

## ரணில் களமிறக்கம் 27 இல் வெளிப்படும்

கொழும்பு, ஜூலை 24
ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தனது நிலைப்பாட்டை எதிர்வரும் 27 ஆம் திகதி ஜனாதிபதி அறிவிக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்குரிய நாள் நிர்ணயிக்கப்பட்ட பிறகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும் முதலாவது பிரதான மக்கள் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி காலியில் நடைபெறவுள்ளது.

இந்த வாரத்துக்குள் ஜனாதிபதித்தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படவுள்ள நிலையிலே அவர் தனது நிலைப்பாட்டை காலியில் இடம்பெறும் கூட்டத்தில் தெரிவிக்கவுள்ளார் என்று கூறப்படுகிறது. (ச-44)

## 22 ஆவது திருத்தச் சட்டம் சவாலுக்குட்படுத்துவோம்

### உதய கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 24
சர்வஜன வாக்கெடுப்பு இல்லாமல் உத்தேச 22 ஆவது திருத்தத்தை எளிய பெரும்பான்மையுடன்நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டவுடன் அதனை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோம்.

-இவ்வாறு பிவிதுறு ஹெல உறுமயக் கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என்று நாட்டு மக்கள் எதிர்பார்த்துள்ள நிலையில் மக்களை குழப்பத்துக்குள் தள்ளும் வகையில் 22 ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 22 ஆவது திருத்தம் பற்றி ஜனாதிபதி குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது.

சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லாமல் 22 ஆவது திருத்தத்தை எளிய பெரும்பான்மையுடன் நிறைவேற்ற அரசாங்கம் முயற்சிக்கிறது. இந்த சட்டவரைவை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## பைடனைப் போன்று ரணில் பின்னடிப்பார்

### ஐ.ம. சக்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலிலிருந்து ஜோ பைடன் பின்வாங்கியதுபோல ரணில் விக்கிரம சிங்கவும் விலகி, வேறு வேட்பாளரை களமிறக்கக்கூடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலகி, கமலா ஹாரிசை பைடன் பரிந்துரைத்துள்ளார். அதுபோல ரணில் விக்கிரமசிங்க விலகி, வேறு ஒருவரை பரிந்துரைக்கலாம்.

குழப்பத்தை ஏற்படுத்துவது ரணிலுக்கு கைவந்த கலை. அந்தக் கலையைத்தான் தேர்தல் விடயத்திலும் பயன்படுத்திவருகின்றார். ரணிலைப் பற்றி எமக்கு நன்கு தெரியும். எனவே, அவரின் குழப்ப வித்தைக்குள் சிக்கிவிட வேண்டாம் என்றும் அவர் தெரிவித்தார். (ச-44)

## நிச்சயம் நடக்கும்!

### ஜனாதிபதி உறுதி



கொழும்பு , ஜூலை 24
ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும், எந்தக் காரணம் கொண்டும் அது பிற்போடப்படமாட்டாது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் வேறு எந்தத் தேர்தலும் நடக்காது.

-இவ்வாறு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஆளுங்கட்சி நாடாளுமன்றக் குழு கூட்டத்தில் திட்டவட்டமாக அறிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஜனாதிபதி தேர்தலுக்கே பாதீட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, எனவே, அது நிச்சயம் நடக்கும். அத்துடன், நாடாளுமன்றத் தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## ஜீவனை கைதுசெய்ய உத்தரவு

அமைச்சர் ஜீவன் தொண்டமானைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு நுவரெலியா பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

களனிவெளி பெருந்தோட்டத் துக்குட்பட்ட தேயிலைத் தொழிற்சாலை ஒன்றுக்குள் கடந்த மே மாதம் அத்துமீறி நுழைந்த தாகக் கூறி அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்டவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## தேர்தல் பிற்போடப்பட்டால் பங்களாதேஷ் நிலையே!

### சன்ன ஜயசுமன எச்சரிப்பு

கொழும்பு, ஜூலை 24
ஜனாதிபதித் தேர்தல் ஏதேனுமொரு வழியில் பிற்போடப்படுமானால் பங்களாதேஷில் நடப்பதுதான் நாளை இலங்கையிலும் நடக்கும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன.

ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. எனினும் அவை கைகூடவில்லை. அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் முன்வைத்தால்கூட தேர்தல் ஒத்திவைப்பதற்குரிய சாத்தியம் குறைவு. எனவே, ஒக்ரோபர் 2 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். அந்தவகையில் செப்ரெம்பர் 21 அல்லது 28 இல் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும்.

வேறு ஏதேனும் வழியில் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முயற்சி எடுக்கப்பட்டால் பங்களாதேஷில் இன்று நடப்பது, நாளை இலங்கையில் வெடிக்கும்- என்றார். (ச-44)

## தேர்தலை அரசு தடுக்காது

ஜனாதிபதித் தேர்தலைத் தடுப்பதற்கு அரசு எந்தவொரு தலையீட்டையும் செய்யாது. உரிய நேரத்தில் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாகாணசபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலுக்கு அரசு எந்தவொரு இடையூறையும் ஏற்படுத்தாது. தேர்தல் நடத்துவதற்குரிய நிதியையும் அரசு வழங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபராதத் தொகை இனி பன்மடங்கு!

## வருகிறது சட்டவரைவு

**கொழும்பு, ஜூலை 24**

**பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் நீதிமன்றினால் விதிக்கப்படக் கூடிய அதிகபட்ச அபராதத் தொகையை அதிகரிக்கும் சட்ட வரைவு விரைவில் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.**

அதன்படி அபராதத் தொகையை அதிகரிக்கும் நோக்கில் குற்றவியல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. குற்றவியல் சட்டத்தின் சில சரத்துகள் இந்தச் சட்டவரைவினூடாக திருத்தப்பட்டுள்ளது. அதற்கமைய இதுவரையில் 1500 ரூபாவாக காணப்பட்ட அபராதத்தொகை ஒரு மில்லியன் ரூபாவாக உயர்த்தப்படவுள்ளது. குழப்பம் விளைவித்தல் தொடர்பில் விதிக்கப்பட்ட அபராதத் தொகை 100 ரூபாவிலிருந்து பத்தாயிரம் ரூபாவாக உயர்த்துவதற்கு யோசனை முன்மொழியப்பட்டுள்ளது. (ச-இ)

## சுத்தமான குடிநீரின்றி 20.3 வீதமானோர்

கொழும்பு, ஜூலை 24

இலங்கையில் 20.03 வீத மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் கிடைப்பதில்லையென ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வின் பிரகாரம் 33.4 வீத மக்கள் மட்டுமே தூய குடி தண்ணீரை பெற்றுக்கொள்கின்றனர் என புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. நகர்ப்புறங்களில் 68.6 வீத மக்களும் கிராமப்புறங்களில் 28.2 வீத மக்களும் மட்டுமே தூய குடிதண்ணீரை பெற்றுக்கொள்கின்றனர். பெருந்தோட்டத்துறையில் நிலைமை மிக மோசமாக காணப்படுகிறது. அங்கு 3.1 வீத மக்கள் மட்டுமே தூய குடிதண்ணீரை பெற்றுக்கொள்கின்றனர். (ச-6)

## ஜப்பான் பிரதிநிதிகளை சந்தித்தார் அநுர



யாழ்ப்பாணம், ஜூலை 24

ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஜப்பானிய வெளியுறவு பிரதி அமைச்சர் சுஜே யொஷிபியூமியை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொருளாதார இராஜதந்திர உறவுகள் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. ஜப்பானின் தென்மேற்கு - தென்கிழக்கு ஆசிய விவகாரங்களுக்கான பணிப்பாளர்கள், உதவிப்பணிப்பாளர்கள் ஆகியோரும் கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தனர். (ச-6)

## அதிபர், ஆசிரியர்களுக்கு இந்தவாரத்தில் தீர்வு

### கல்வியமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 24

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கு இந்த வாரத்தில் தீர்வு வழங்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் இரண்டு வார காலம் சட்டப்படி வேலை தொழிற்சங்கப் போராட்டத்தை அறிவித்துள்ளன. முதல் இரண்டு வாரங்களுக்கு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது. இந்தப் போராட்டமானது மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை பாதிக்காது. இதேவேளை, பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியிலும் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் நிலவும் 16000 ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## 164 இலங்கையருக்கு சிவப்பு பிடிவிராந்து

கொழும்பு, ஜூலை 24

இலங்கையில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ள 164 இலங்கையர்களுக்கு எதிராக சிவப்பு பிடிவிராந்து உத்தரவு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி டுபாய், இந்தியா உள்ளிட்ட நாடுகளில் தலைமறைவாக வாழ்ந்து வரும் குற்றவாளிகளுக்கெதிராகவே சர்வதேச பொலிஸாரிடம் விவப்பு பிடிவிராந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக குற்ற விசாரணைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## வாகன இறக்குமதி ஓகஸ்டில் அறிவிப்பு



வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்கும் திட்டம் அடுத்த மாதம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

பொதுப் போக்குவரத்துச்சேவைகள் மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காக தேவையான வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு இந்த வருட இறுதிக்குள் அனுமதி வழங்கப்படும். வெளிநாட்டுக் கையிருப்புகளை பாதிக்கும் வகையில் வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டால், அது அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதியில் பாதிப்பை ஏற்படுத்தும் என இராஜாங்க அமைச்சர் சு[illegible]ளார். (ச-இ)

## புதினம் தெரியுமோ?

பிழை செய்தவையை விட்டிட்டு, பிழையக் கண்டுபிடிக்கிறவையைத் தண்டிக்கிற உலகம் இது. இப்படிப்பட்ட உலகத்தில, டாக்குத்தர் அர்ச்சுனா விடிய விடிய எத்தினை லைவ் வீடியோ போட்டாலும் ஒரு பிரியோசனமும் இல்லை எண்டது இப்ப வெட்டவெளிச்சமாகிட்டுது. சாவகச்சேரி ஆஸ்பத்திரி விசயத்தில கடைசிக்கட்டத்தில தனக்கிருந்த மக்கள் சப்போர்ட்டைப் பார்த்து டாக்குத்தர் அர்ச்சுனா கொஞ்சம் கூடக்குறைய சன்னதம் ஆடிப்போட்டார்தான். அதைமட்டும் வைச்சுக்கொண்டு, அர்ச்சுனாவில தான் முழுக்கப் பிழை எண்டு பழிபோடுறதும் அநியாயம் தானே.

இப்ப என்னெண்டால், ஒரு ஆஸ்பத்திரியின்ர அத்தியட்சகரா இருந்தவரை இப்ப பேராதனை ஆஸ்பத்திரியில மருத்துவப் பொறுப்பதிகாரியாப் போட்டு ' டீ- புரமோசன்' பண்ணியிருக்கினம். அவரை இன்னொரு ஆஸ்பத்திரிக்கு அத்தியட்சகராப் போடுறதுதான் முறை. அப்பிடிப்பட்ட நிலையில் அர்ச்சுனாவை பதவியிறக்கம் செய்து, சுகாதார அமைச்சுக்காரர் ஆரையோ திருப்திப்படுத்த நினைக்கினம்போல.

சனங்களும், அர்ச்சுனாவும் திரும்பத் திரும்ப சொல்லுற விசயம் ஒண்டுதான். ' ஆரெல்லாம் பிழை செய்தவை எண்டு குற்றம் சாட்டுப்பட்டுதோ அவையை ஒரு நேர்மையான குழு விசாரிச்சு உண்மை, பொய்யைக் கண்டறிய வேணும்'. இதுதான் எல்லாரின்ர கோரிக்கையும். ஆனால் அதைச் செய்யிறதை விட்டிட்டு தேவையில்லாத ஆணியை மட்டும் சுகாதார அமைச்சு நல்ல பொறுப்போட பிடுங்கிக் கொண்டிருக்குது.

அர்ச்சுனாவை அத்தியட்சகர் பதவியில இருந்து நிப்பாட்டின பிறகு மட்டத்தேள் கடிச்சதால மருந்தெடுக்க இரவில போனவருக்கு ஒரு குளிசை குடுக்கக்கூட ஒருத்தரும் இருக்கேலை. அந்தளவு அக்கறையீனமா இருக்கிற ஆஸ்பத்திரி பற்றி ஒரு நடவடிக்கையும் எடுபடேலை. கேட்டால், அண்டைக்கு டாக்குத்தர்மார் லீவாம். அதால இரவில வருத்தம் எண்டு வந்தது சனத்தின்ர பிழை எண்டும் டாக்குத்தர்மார் வட்டாரத்தில சொல்லுப்பட்டிருக்காம். இனிமேல் உந்த மட்டத்தேள், கொடுக்கன், பாம்புகளுக்கெல்லாம் எப்பஎப்ப டாக்குத்தர்மார் லீவெண்டு சொன்னால், அண்டைக்கு அதுகளும் கடிக்காமல் இருக்குங்கள்.

இப்பிடி அலட்சியமா, சனத்தைப்பற்றி கவலைப்படாதவை பற்றி விசாரணை வைச்சு, உண்மையைக்கண்டறிய அலுவல்பாருங்கோ. அதை விட்டிட்டு அர்ச்சுனாவை பதவியிறக்கிறம், ஆட்டுக்குட்டிக்கு பல்லுத்தீட்டுறம் எண்டு கண்டறியாத வேலை பாக்காதையுங்கோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகத் திருவிழா யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 24

வட மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய உள்ளூர் மற்றும் சர்வதேச எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்றுறை மன்றத்தின் ஏற்பாட்டில் சர்வதேச புத்தகத் திருவிழாக் கண்காட்சி யாழ். கலாசார நிலையத்தில் அடுத்தமாதம் 9 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (ச-25)



# பனைவாரக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 24

பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களும், வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த பனை அபிவிருத்தி வாரக் கண்காட்சி யாழ். சங்கிலியன் பூங்காவில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் என். திருலிங்கநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வட மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், மாகாண கூட்டுறவு அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். (ச-25-17)

# சொற்பொழிவு

யாழ்., ஜூலை 24

சைவவாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் - 15 நவாலி தெற்கு திருவருள்மிகு ஸ்ரீ நாகராஜா ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் பிரதான மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இளஞ்சைவப்புலவர், பிரசங்கச் சுடர் நித்திய பாபுதரன் 'மாணிக்கவாசகரும் திருத்தோணோக்கமும்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார்.

சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஒ-25)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். குடும்ப விடயமாக உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள். முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். இளைய சகோதரர்கள் உதவிகரமாக இருப்பார்கள். மனதில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் நீங்கும்.

**இடபம்:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. கடன் வாங்கவும் நேரிடும். பேசும்போது நிதானம் அவசியம்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். மனவருத்தங்கள் நீங்கும். காரியம் சாதகமாக முடியும். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். வீண் செலவுகள் ஏற்படக்கூடும். அம்பிகையை வழிபட மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். உறவினர்கள் வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். இளைய சகோதரர்களால் உதவியும் உற்சாகமும் உண்டு. மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். அதிக நற்பலன்களைப் பெறலாம்.

**கன்னி:** தேவையான பணம் இருந்தாலும் திடீர்ச் செலவுகளும் ஏற்பட்டு கையிருப்பைக் குறைக்கும். ஒரு சிலருக்கு வாழ்க்கைத்துணைவழியில் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். பணம் கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். ஆதாயம் உண்டாகும். கூடுதல் உழைப்பு தேவைப்படும். நன்மைகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் உண்டாகும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். உடல்நலனில் கவனம் தேவை. பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** அவப்பெயர் நீங்கும். நீண்டநாள்களாகத் தொடர்பு கொள்ள முடியாமல் இருந்த நண்பர்களை தொடர்பு கொண்டு பேசுவீர்கள். வியாபாரம் வழக்கம்போலவே இருக்கும். தட்சிணாமூர்த்தி வழிபாடு தடைகளைத் தகர்க்கும்.

**மகரம்:** எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். ஆதாயம் கிடைக்கும். சகோதரர்கள் உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பார்கள். முடிவு எடுக்க உகந்த நாள்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண் விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

# குருபூஜை விழாவும் சொற்பொழிவும்

யாழ்ப்பாணம், ஜூலை 24

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ. பால.திருகுணானந்தக் குருக்களின் ஏற்பாட்டில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவும், பரமகுரு சுவாமிகள் குருபூஜை விழாவும் தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து சிறப்பிக்க வுள்ளார். 'வணங்க வேண்டிய பரமகுரு சுவாமிகள்' எனும் விடயப்பொருளில் பிரசங்க பூஷணம் சைவப்புலவர் பொன். சந்திரவேல் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஒ-25)

# செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

பளை - இந்திராபுரம் முன்பள்ளிச் சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் முன்பள்ளி முன்றலில் இடம்பெறவுள்ளது. (ச-9)

# மஹோற்சவம்

அருள்மிகு கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் முதலாய கோவில்கள் ஸ்ரீ பருவதவர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்கசுவாமியின் மஹோற்சவப் பெருவிழா நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் மறுநாள் 3ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (த-159)

# இலக்கியப் போட்டிகள்

கிளிநொச்சி , ஜூலை 24

கிளி. வட்டக்கச்சி தமிழ் ஆசிரியை அமரர் ஜீவரஞ்சினி விவேகானந்தராசாவின் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் மட்ட படைப்பு இலக்கியப் பயிலரங்கு போட்டிகளும், திறந்த போட்டிகளும் நடைபெறவுள்ளன.

பாடசாலை மட்டப் போட்டிகள் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் பயிலரங்கமாக நடைபெற்று அன்றைய தினமே போட்டிகளும் நடைபெறும். பயிலரங்குகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி போட்டிகள் 11.30 இற்கு நடைபெறும். திறந்த போட்டியாக சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடைபெறவுள்ளன. (ச-22,13)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் தெல்லிப்பழைப் பிரிவில் 'செஞ்சிலுவைச் சேவை' தொடர்பான பரப்புரை நிகழ்வு, இளவாலை வடமேற்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் கிராம அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர், தெல்லிப்பழைப் பிரிவுத் தலைவர், யாழ்.கிளையின் வளவாளர்கள், கிராம மக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மீளுயிர்பெறுமா கூட்டமைப்பு?

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீள உருவாக்கவேண்டும். அது தேர்தல் கூட்டாக அல்லாமல் தேசத்தின் கூட்டாக இருக்கவேண்டும்' என்று அழைப்பு விடுத்துள்ளார் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரான சிவஞானம் சிறீதரன். தமிழர்களின் அரசியல் உரிமைமீது போர்தொடுக்கும் சிங்கள பேரினவாதத்தை 'தமிழ்த் தேசியம்' என்ற ஒரு குடையின் கீழ் நின்று எதிர்கொள்வதில் தமிழினம் தோற்றுப் போயுள்ளது என்றும் அவர் பட்டவர்த்தனம் செய்திருக்கின்றார். தமிழர்களின் இன விடுதலையையும், சுதந்திர வேட்கையையும், அரசியல் அபிலாஷைகளையும் அடைந்து கொள்வதில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைத் தேர்ந்தெடுத்தாலும், 'ஆயுதங்கள் மூலம் தான் இவற்றைப் பெறலாம்' என்ற பிடிவாதம் புலிகளிடம் இருந்ததில்லை. மாறாக மாற்றுச் சிந்தனைகள் - தூரநோக்கான செயற்றிட்டங்கள் கொண்டவர்களாகவே புலிகள் இருந்தனர். இவ்வாறாக தமிழர்களுக்குப் பலமாக அரசியல் கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்ற பின்னணியில் புலிகளால்தான் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.


'பலமான மனிதர்கள் தாம் சார்ந்த இடத்தைப் பலமாக உருவாக்கிக்கொள்வார்கள்' என்பதைப் போல், ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களுக்கான அசுர பலம்வாய்ந்த அரசியல் கட்டமைப்பாகவே இருந்தது. 2009ஆம் ஆண்டுக்கு முன்னரும் அதன்பின்னர் சில காலங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தம் அரசியல் அபிலாஷைகளுக்கான 'ஒற்றை விடிவெள்ளியாகக் கொண்டிருப்பதில்' தமிழர்கள் தயக்கம் காட்டியதே இல்லை. ஆனால், இன்று கூட்டமைப்பு அதேநிலையில் தொடர்கின்றதா? என்றால், விவாதங்களுக்கு இடமின்றிஅதைத்திட்டவட்டமாகமறுத்துவிடலாம்.

சிங்களப் பேரினவாதத்தின் திட்டமிட்ட சதிராட்டங்களாலும், தந்திரங்களாலும், உட்கட்சி மோதல்களாலும், அதிகாரக் கதிரைக்கான போட்டியாலும் கூட்டமைப்பு இன்று வலுவிழந்து - பலமிழந்து நிற்கத் திராணியற்றுத் தட்டுத்தடுமாறி திசைக்கொன்றாக சிதறுண்டு போய்விட்டது. 'இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனம்போல்' புலிகளால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு, சுருங்கிச் சுருங்கி இன்று அரசியல் போராட்டத்துக்கு அருகதையற்ற நிலைக்கே சென்றுள்ளது என்றால், அது கசப்பான மெய்மைதான். இவ்வாறானதொரு பின்னணியில், 'தேர்தலுக்காக இல்லாமல், தேசத்துக்காக கூட்டமைப்பை மீளமைக்கவேண்டும்' என்ற நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் அழைப்பு மிகக் கனதியானது. காலத்தேவையானதும்கூட.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், சிறீதரனின் அழைப்புத் தொடர்பில் போர்க்கால அடிப்படையில் பரிசீலித்துக் கொள்ள வேண்டும். ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நியமிப்பதற்குக் காட்டும் அக்கறையை பெருவிருப்பை சற்றும் குறைவில்லாமல் காட்ட வேண்டிய இந்த விடயத்தில், தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர்களினதும், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களினதும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் என்ன என்பதைத்தான் பொதுமக்கள் தற்போது எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். போர்க்காலத்தின் பின்னர், தமிழர்களின் மனங்களில் கனன்று கொண்டிருந்த நெருப்பை சிறீதரன் பற்ற வைத்திருக்கின்றார். அது பற்றியெரியுமா? அல்லது அணைந்து போகுமா? என்பதற்கு காலம்தான் பதில்.



# ட்ரக்குகள், விசைப்படகுகள் ஜப்பான் அரசு உதவிக்கரம்



**கொழும்பு , ஜூலை 24**

**நாட்டின் சகல பகுதிகளுக்கும் மருந்துகளை பழுதடையாமல் எடுத்துச்செல்லக் கூடியதான 9 குளிரூட்டப்பட்ட 3 மில்லியன் டொலர் பெறுமதியான ட்ரக் ரக வாகனங்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்களை முறியடிப்பதற்கான விசைப்படகுகள் என்பவற்றை ஜப்பான் அரசாங்கம் இலங்கைக்கு அன்பளிப்புச் செய்துள்ளது.**

யுனிசெப் மற்றும் ஐ.நா.போதைவஸ்து தடுப்புப்பிரிவு ஊடாக அவை அன்பளிப்புச் செய்யப்பட்டன. ட்ரக் வாகனங்களை சுகாதார அமைச்சில் வைத்து ஜப்பானியத் தூதுவர், சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திணவிடம் கையளித்தார். அதேவேளை போதைவஸ்து கடத்தல்களை முறியடிக்கும் நோக்குடன் 300 குதிரை வலு இயந்திரங்கள் பொருத்தக்கூடிய அதிவேக விசைப்படகுகள் கடற்படையிடம் கையளிக்கப்பட்டன.

இந்த விசைப்படகுகளின் உதவியுடன் போதைவஸ்து கடத்தல்களையும் கடல்சார் குற்றச் செயல்களையும் கட்டுப்படுத்தலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-22,6)

# தொழில்நுட்ப பல்கலைக்கழகம் கொத்தலாவலையில் திறந்துவைப்பு

சேர் ஜோன் கொத்தலாவலை தொழில்நுட்ப பல்கலைக்கழகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழாவில் மகாசங்கத்தினர் மற்றும் பாதுகாப்புப்படை உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அடுத்த ஆண்டு ஜனவரியில் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

## இந்தியச் சுற்றுலா சலுகைத் திட்டம்

இந்தியா , ஜூலை 24

இந்திய புகையிரத சுற்றுலாக் கூட்டுத்தாபனமும் எல்.எஸ்.ஆர் நிறுவன மும் இணைந்து விசேட இந்திய சுற்றுலா சலுகைத்திட்டங்களை அறிமுகம் செய்யவுள்ளன. இதன்படி காசி, ரிஷிகேசம், அமிர்தசரஸ், லும்பினி போன்ற இடங்களை விசேட ரயில் மூலம் தரிசிக்கமுடியும் என இந்திய புகையிரத சுற்றுலா கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. 100 யாத்திரிகர்கள் கொண்ட தொகுதியாக பதிவுகளை மேற்கொள்ளலாமெனவும் யாத்திரிகர்களுக்குரிய உணவு தங்குமிட வசதிகள் யாவும் உயர்தரத்தில் ஏற்படுத்திக்கொடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-22- 6)

## தேர்தலுக்குத் தயாரான தபால் திணைக்களம்!

கொழும்பு , ஜூலை 24

தபால் திணைக்களம் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக பதில் அஞ்சல் அதிபர் நாயகம் ரஜிதா ரணசிங்க தெரிவித்துள்ளார். 8 ஆயிரம் தபால் ஊழியர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தபால் மூல வாக்களிப்பு, தேர்தல் பிரசாரத் துண்டுப் பிரசுர விநியோகம், வாக்குச் சீட்டு விநியோகம் போன்ற பணிகளை எதுவித பிரச்சினையுமின்றி மேற்கொள்ள முடியுமெனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-22,6)

## பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு , ஜூலை 24

இந்த ஆண்டின் மே மாதத்துடன் ஒப்பிடுகையில் கடந்த ஜூன் மாதம் முதன்மை பணவீக்கம், உணவு மற்றும் உணவல்லா பணவீக்கம் என்பன உயர்வடைந்துள்ளன என்று தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மே மாதம் 1.6 சதவீதமாகக் காணப்பட்ட முதன்மை பணவீக்கம் கடந்த ஜூன் மாதம் 2.4 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

அதேவேளை 0.5 சதவீதமாகக் காணப்பட்ட உணவுப் பணவீக்கம் 1.9 சதவீதமாகவும், 2.4 சதவீதமாக காணப்பட்ட உணவல்லாத பணவீக்கம் 2.7 சதவீதமாகவும் உயர்வடைந்துள்ளது. (ச-இ)

**நாளை**

**25.07.2024**

வியாழக்கிழமை - ஆடி - 09

சுபநேரம் : 07.32 - 09.02

ராகுகாலம் : 01.32 - 03.02

**நாளொரு நல்வார்த்தை**

**கஷ்டங்கள், நஷ்டங்கள் அடைந்த பின் மனிதர் அதிக அடக்கத்தையும் அறிவையும் பெறுகின்றனர்.**

*- பிராங்க்ளின்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதி மஹோற்சவம் கடைப்பிடிப்பு விதிமுறைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 24

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் மஹோற்சவத்தின்போது கடைப்பிடிக்கவேண்டிய பொதுச்சுகாதார விதிமுறைகளை வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் அறிவித்துள்ளது.

அதன்படி உணவு கையாளும் நிலையங்கள் தத்தமது உள்ளூராட்சிச் சபைகளின் நடப்பாண்டுக்கான அனுமதியை பெற்றிருத்தல் வேண்டும். உணவு கையாளும் நிலையங்களில் கடமைபுரிபவர்கள் மற்றும் அன்னதான மடங்களில் கடமைபுரிபவர்கள் அனைவரும் நடப்பாண்டுக்கான மருத்துவச் சான்றிதழ் வைத்திருப்பதுடன் தனிநபர் சுகாதாரம் பேணுவதனை உறுதிப்படுத்துதல்வேண்டும்.

தண்ணீர்ப்பந்தல்கள், சர்பத் கடைகள் மற்றும் ஐஸ்கிறீம் கடைகள் நடத்துபவர்கள் அனுமதிபெறப்பட்ட கடைகளில் நீர்ப்பரிசோதனை அறிக்கை வைத்திருப்பவர்களிடம் இருந்து ஐஸ்கட்டிகளைக் கொள்வனவு செய்வதுடன் அதற்கான பற்றுச்சீட்டையும் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.

ஆலயச்சுற்றாடலில் புகையிலை சார்ந்த பொருட்களை விற்பனை செய்வதும் பயன்படுத்துவதும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுச்சுகாதாரம் சார்ந்த விடயங்கள் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை உற்சவ கால சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நிலையத்தில் பெற்றுக்கொள்ளமுடியும். வர்த்தக நிலையங்கள் மற்றும் மடங்களிலும் தண்ணீர்ப் பந்தல்களிலும் இருந்து வெளியேறும் கழிவுகளை குப்பைத்தொட்டி கொண்டு ஓரிடத்தில் சேகரிப்பதுடன் அதனை உரியமுறையில் அகற்றுவதனை உறுதிப்படுத்தவேண்டும். ஆலயச் சூழலில் பிளாஸ்ரிக் பாவனை, பச்சை குத்துதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. காவடி குத்துபவர்கள் நகராட்சி மன்றத்தின் நடப்பாண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் தொற்றுநீக்கும் வசதியும் ஏற்பாடு செய்திருத்தல்வேண்டும். பொதுச்சுகாதாரம் தொடர்பான சட்ட ஏற்பாடுகளை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-26)





# நீதிகோரி உறவுகள் யாழில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நீதிகோரி நேற்றுச் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது மண்டபத்தின் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரிய பல்வேறு பதாகைகளையும், தமது உறவுகளின் ஒளிப்படங்களையும் கைகளில் ஏந்தி கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி வடக்கு - கிழக்கிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் எதிர்வரும் நாள்களில் சுழற்சி முறையிலான போராட்டங்களை தாம் முன்னெடுக்கவுள்ளதாகவும் போராட்டத்தில் கலந்து கொண்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர். (ச-66-20)

# ஆள் மாறாட்டம்: சட்டத்தரணி கைது

யாழ்ப்பாணம், ஜூலை 24

ஆள்மாறாட்டம் தொடர்பான வழக்கில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சட்டத்தரணியொருவர், யாழ்ப்பாண பிராந்திய விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சட்டத்தரணி சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார். அத்துடன் சட்டத்தரணியின் அலுவலகத்தில் இருந்த மூன்று கணினிகளையும் பகுப்பாய்வு விசாரணைக்குட்படுத்த நீதிமன்றம் உத்தரவிட்டது.

சட்டத்தரணியொருவர் இளநிலை சட்டத்தரணிகள் மூலமாக ஆள்மாறாட்டம் செய்து, வெளிநாட்டிலுள்ள ஒரு தம்பதியர் விவாகரத்துப் பெற்றுக்கொள்வதாக நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டமை தெரியவந்தது. இதையடுத்து, சட்டத்தரணியின் அலுவலகத்தில் சில வாரங்களுக்கு முன்னர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டிருந்தன.

இதன்தொடர்ச்சியாகவே அவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ஒ-26)



# வாழ்வாதாரப் பயிர்கள் யானைகளால் நாசம்

கிளிநொச்சி, ஜூலை 24

கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடு நகர் கிராம அலுவலர் பிரிவின் கீழுள்ள சம்புக் குளம் மற்றும் நாவல் நகர் ஆகிய மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் தொடர்ச்சியாக வரும் யானைகள் அந்தப்பகுதியிலுள்ள தென்னை, வாழை, வீட்டுத்தோட்டப் பயிர்களை அழித்து வருவதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக மேற்படி கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். மக்கள் குடியிருப்புக்குள் புகும் யானைகள் தென்னைகள் மற்றும் வாழைகளை முற்றாக அழிக்கின்றன. எனவே உரிய அதிகாரிகள் இந்தப் பகுதியில் நிரந்தரமான ஒரு யானை வேலியை அமைத்துத்தர முன் வரவேண்டும் என்றும் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25-113)

# மன்னார் றோ. க. த.க. கரப்பந்தில் சம்பியன்

மன்னார், ஜூலை 24

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற 18 வயதுப்பிரிவு ஆண்கள் அணிகளுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் மன்னார் துள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணி வெற்றிவாகை சூடியது. யாழ்ப்பாணம் ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் மன்னார் துள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணியும், புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன. முதலாம் சுற்றில் 24: 23 என்ற புள்ளிக் கணக்கில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி வெற்றி பெற்றது. இரண்டாம் சுற்றில் 24: 18 என்ற புள்ளிக் கணக்கிலும், மூன்றாம் சுற்றில் 24:17 என்ற புள்ளிக் கணக்கிலும் மன்னார் துள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை வெற்றி பெற்றுச் சம்பியனை தனதாக்கியது. (ச-25-60)




# நெடுவூர் திருவிழா முன்னேற்பாடுகள்

நெடுந்தீவு மண்ணில் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை 'மீண்டும் ஊருக்குப் போவோம்' என்னும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ள நெடுவூர் திருவிழாவுக்கான முன்னேற்பாட்டுக் குழுக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வடக்கு மாகாணசபை கேட்போர் கூடத்தில் வடமாகாண பிரதம செயலாளர் இலட்சுமணன் இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. கலந்துரையாடலில் நெடுவூர் திருவிழாவுக்கு வருபவர்களுக்கான சுகாதாரம், குடிதண்ணீர், உணவு ,பாதுகாப்பு, போக்குவரத்து தங்குமிட வசதிகளை ஏற்பாடு செய்தல் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. கலந்துரையாடலில் வடக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், ஆணையாளர்கள், துறைசார் திணைக்கள அதிகாரிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜுலை 24

நெடுந்தீவு பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் பண்பாட்டு விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேவா கலாசார அரங்கில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலர் திருமதி நிவேதிகா கேதீசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட பதில் மாவட்டச் செயல் ம. பிரதீபன், சிறப்பு விருந்தினராக மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களக பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ் ஆகியோர் கலந்து கொள்வர். (ச-9)

# உட்கட்சி பூசல் உண்மையே

## நாமல் ஆதங்கம்

கொழும்பு, ஜுலை 24

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கருத்து வேறுபாடுகள் எமது கட்சிக்குள் உள்ளமை உண்மைதான். கருத்து மோதல் என்பது கட்சிக்குள் பிளவு என்பது அல்ல. இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

தனிநபர்களைவிட கொள்கையே முக்கியம். எனவே, கொள்கையை அடிப்படையாகக்கொண்டே தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)


# கேள்வி அறிவித்தல்

## மேலதிக முத்திரை தீர்வை - 2024

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி)

1. வலிகாமம் வடக்கு பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக் குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக் கேள்வியாளர்கள், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக் கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக் கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்கள் **கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை - கொல்லன்கலட்டி, (தொலைபேசி இல: 021-2241130, தொலை நகல் 021-2243688) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024.07.24 – 2024.08.06 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையில் சமர்ப்பித்து** ரூ.3000.00 மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) 2024.08.07 ஆம் திகதி 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி) எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள் அவைகள் மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளரகளின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக் கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6 இல் குறிப்பிடப்பட்ட முகவரியில் பி.ப 2.30 மணிக்கு 2024.07.29 அன்று நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுடியாகும் | | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் | திகதி | தொகை (ரூ) | தேவைப்படும் காலம் |
| 01 | NP/14/41(14)/05/01/318/PSDG(SD)/2024 | Reconstruction of Veravil Road Balance Work – Ilavalai North | 0.89 | 45 நாட்கள் | C9 & C8 வீதி நிர்மாணம் | 49 நாட்கள் | 24.09.2024 | 9,000.00 | Till 21.10.2024 |

***விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VAT மற்றும் வேறு வரிகள்) 50 மில்லியனினுள் இருப்பின், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொது நிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) இல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும்.**

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி)**
**24.07.2024**

(cr.42872) (N-1)



# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 01 . 1942



மறைவு 23 . 07 . 2024

## திருமதி சிவசுப்பிரமணியம் ஜெகசோதி

காரைநகர் நாவற்கண்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் ஜெகசோதி நேற்று (23.07.2024) செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கவேல் லக்ஷ்மிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி சி.சிவசுப்பிரமணியம் (காது மூக்கு தொண்டை அறுவைச்சிகிச்சை நிபுணர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பழனியார் சின்னத்தம்பி-தங்கம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் தியாகலிங்கம், கொங்காதரன் காலஞ்சென்ற சத்தியதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திலகவதி காலஞ்சென்ற தவமணி மற்றும் தனலக்ஷ்மி, கமலாதேவி ஆகியோரின் மைத்துனியும் பாலகுமார், பவானி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஞானசோதி, வைத்தியகலாநிதி S.கேதீஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் திருவேணி, வைஷ்ணவி, சர்வேஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற ஸ்ரீவிக்னேஸ்வரன்-சிவனேஸ்வரி தம்பதியினர், காலஞ்சென்ற முத்தையா மற்றும் பரமேஸ்வரி தம்பதியினர் ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2024) வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**96, 1ம் குறுக்குத்தெரு**
**யாழ்ப்பாணம்**


**குடும்பத்தினர்.**
**021 222 2575, 077 629 0614**

(CS.99) V-1



# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 07 . 1967



மறைவு 22 . 07 . 2024

## அமரர் பரமசாமி சிவலிங்கம்

புங்குடுதீவு 4ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வட்டு மேற்கு மூளாய் வீதியை வதிவிடமாகவும் கொண்ட பரமசாமி சிவலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (22.07.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமசாமி-சீதாலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரமசாமி சிவனேசன் (கிளிநொச்சி) அவர்களின் அன்புச் சகோதரனும் கோசலா அவர்களின் (ஆசிரியர் காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம்), அன்புக் கணவரும் நடராஜா (அமரர்)-நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சுருதிகேசன், யக்னேகாயன் (வட்டு இந்துக் கல்லூரி) யதுனேசன், வினுயா (வட்டு மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகேஸ்வரி (கிளிநொச்சி), மேகலா (யாழ்ப்பாணம்), ரூபகலா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் குககுமார் (யாழ்ப்பாணம்) றஞ்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகலனும், பிரணவி, மயூரன் தனோஜா (கனடா), லிவேனியா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் சிவசாருதனின் மாமாவும் அக்ஷரா (வட்டு மத்திய கல்லூரி), சஜித் (லண்டன்), கவிஷ் (லண்டன்), அஜய் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (25.07.2024) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் 11.00 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**மூளாய் வீதி**
**வட்டுக்கோட்டை**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 42875) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பற்றாக்குறை; பெற்றோர் ஆர்ப்பாட்டம்



உலுக்குளம் ஸ்ரீ சுமன வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் இதன் காரணமாக மாணவர்களுக்கு கற்றல் செயற்பாடுகள் போதிய அளவில் இடம்பெறுவதில்லை எனவும் தெரிவித்து பெற்றோர் பாடசாலைக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஓ-110)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஜுலை 24

தேசிய மாணவர் படையணியின் 13ஆம் ஆண்டு நிறைவையொட்டி மாபெரும் குருதிக்கொடை முகாம் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதியில் உள்ள தேசிய மாணவர் படையணி தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது. (ஒ-இ)

# வருடாந்தப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜுலை 24

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு சந்தனமுதலிச்சி புலம் முருகமூர்த்தி கோவில் வருடாந்த பெருந் திருவிழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச-9)

## நாஹா மருத்துவ நிலையம்

மூளைக்கட்டிகள், தீவிரமான கை, கால் செயலிழப்பு மோசமான முழங்கால் பாதிப்பு, சிறுநீரில் புரதம் வெளியேறல், நீரிழிவு மாறாத புண்கள், வெளிநாட்டு நோயாளர்கள் குறுகிய காலத்தில் தீர்வை பெறமுடியும்

T.P.: 077 321 2740

வங்கி முன்லேன் சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவீடு) மானிப்பாய்.

# 14 சீன விமானங்கள் தாய்வானில் ஊடுருவல்

சீனாவின் சுமார் 14 போர் விமானங்கள், தாய்வானுக்குள் ஊடுருவிப் பயணித்துள்ளன என்று தாய்வான் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

தாய்வானை சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி என்று சீனா அறிவித்துள்ளது.

ஆனால், சீனாவின் இந்த அறிவிப்புக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ள தாய்வான், தன்னை ஒரு சுதந்திரத் தனிநாடு என்றும் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. அத்துடன், தனது எல்லைகளைப் பாதுகாப்பதற்காக அமெரிக்காவுடன் தாய்வான் கூட்டணியும் அமைத்துள்ளது.

அமெரிக்கா – தாய்வான் இராணுவக் கூட்டணியைக் கண்டித்து சீனா கடல் வழியாகவும், வான் வழியாகவும் அவ்வப்போது அத்துமீறலில் ஈடுபடுவது வழமை. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, சீனாவின் சுமார் 14 போர் விமானங்கள், தாய்வானுக்குள் ஊடுருவிப் பயணித்துள்ளன என்று தாய்வான் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. அண்மையில் தாய்வானில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், அமெரிக்க ஆதரவாளர் வெற்றி பெற்றிருந்தார். அவர் பதவியேற்ற பின்னர், தாய்வானில் சீனாவின் அத்துமீறல்கள் பல மடங்குகள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், ஜுலை 24

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையால் நிர்வகிக்கப்படுகின்ற ஆவரங்கால் அரிச்சுவடி முன்பள்ளியின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு முன்பள்ளி முன்றலில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி ஆசிரியை திருமதி சிவசோதி. சியாமளா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி பா.தனபாலன் கலந்துகொள்ளவுள்ளார். (ச-9)

## aat கருத்தரங்கு BMS - 102
## வியாபாரக் கணிதமும் புள்ளிவிபரவியலும்

யாழ்நகரில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற வளவாளரினால் August 10 ஆம், 11 ஆம் திகதிகளில் பி.ப.1.15 இற்கு ஆரம்பமாகும்

59, ஆரியகுளம் நோக்கிய வீதி, யாழ்ப்பாணம்.

விரிவான விபரங்களுக்கு:

aat Business Mathematics and Statistics

விரிவுரையாளர் 077 663 0793

(cs.55710) (N-1)

# மோசடி விற்பனை: ரூ.100 மில். தண்டம்

கொழும்பு, ஜுலை 24

ஷெல் நிறுவனத்தின் தயாரிப்புகளை அந்த நிறுவன ஊழியர்களின் உதவியுடன் சட்டவிரோதமாகப் பெற்று விற்பனை செய்து வந்த இரண்டு நிறுவனங்களுக்கு கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் 100 மில்லியன் ரூபா தண்டம் விதித்துள்ளது.

வழக்கில் சம்பந்தப்பட்டோர் ஷெல் நிறுவனத்தின் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கும் நீதிமன்றம் தடை விதித்துள்ளதுடன் கையிருப்பிலுள்ள ஷெல் நிறுவனத்தின் தயாரிப்புகளை 26ஆம் திகதி திருப்பி ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டுள்ளது. (ஒ-6)

CHEC
COLOMBO HIGHER EDUCATION ON CONSULTANCY

உங்களது வெளிநாட்டு உயர்கல்விக்கு இன்றே அடித்தளமிடுங்கள்!

USA | EUROPE | CANADA | IRELAND | UNITED KINGDOM



எங்கள் சிறந்த ஆலோசகர் குழுவை,

Jetwing ஹோட்டல் யாழ்ப்பாணம்
27th of July | 10 am to 2 pm

ஸ்ரீ மதுரா ஹோல் வவுனியா
28th of July | 2 pm to 5 pm

ஆகிய இடங்களில் சந்திக்கலாம்.

உங்கள் உடனடி பதிவுகளுக்கு CV, Passport, IELTS மற்றும் ஏனைய கல்வி ஆவணங்களை கொண்டு வாருங்கள்.

ரூபா. 50,000 பெறுமதியான பதிவை இலவசமாக பெற்றுக்கொள்ளவும்

இன்றே பதிவுகளை மேற்கொள்ள மது : 0777 167 606 | 0117 549 600 | 0774 311 140

## பகிரங்க ஏல விற்பனை

Printer, Scanner, கணினித் தொகுதிகள், மடிக்கணினிகள், போட்டோபிரதி இயந்திரங்கள் மற்றும் மின்பிறப்பாக்கி என்பன 07.08.2024 ம் திகதி புதன்கிழமை முற்பகல் 11.30 க்கு பிரதம செயலாளர் அலுவலக வளாகத்தில் ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

பிரதம செயலாளர்,
வட மாகாணம், கைதடி.

(cr.42873) (N-1)

## அறிவித்தல்

மேற்படி யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினால் நிர்வகிக்கப்படும் மறவன்புலவு மேற்கு அருள்மிகு சிதம்பர சித்தி விநாயகர் ஆலயத்தில் சைவபரிபாலன சபையினரால் நியமிக்கப்பட்ட ஆலய முகாமைத்துவ குழு உறுப்பினர்கள் பதவி விலகியுள்ளனர். தற்போது குறித்த ஆலயத்தினை உரிய முறையில் பேணுவதற்காக புதிய முகாமைத்துவ குழுவினை அமைக்க வேண்டிய அவசர சூழ்நிலை எழுந்துள்ளமையினால் குறித்த விடயம் தொடர்பாக கலந்துரையாடி புதிய முகாமைத்துவ குழு உறுப் பினர்களை நியமிக்கும் கூட்டம் எதிர்வரும் 31.07.2024 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சைவபரிபாலன சபை அலுவலகத்தில் இடம்பெறும். எனவே குறித்த கூட்டத்தில் ஆலயத்தைச் சூழவுள்ள விநாயகர் அடியார்கள் அனைவரும் சமுகமளித்து தங்களது கருத்துக்களை தெரிவிப்பதுடன் ஒரு செயற்திறன் மிக்க முகாமைத்துவ குழுவினை அமைக்க ஒத்துழைப்பு வழங்குமாறும் இத்தால் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர்,
சைவபரிபாலன சபை,
இல.66, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(cs.55743) (N-1)

## மக்கள் வங்கி
## பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 31.05.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 27.08.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

### ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 28.08.2024 மற்றும் 29.08.2024

| ஏல விற்பனை நடைபெறும் இடம் | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/ பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ் / பல்கலைக்கழகம், யாழ் / கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-222 2601 : 021-222 2602

PEOPLE'S BANK
Pride of the Nation

(cr.42871) (N -1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன்

## ஒப்பந்தம் கைச்சாத்து

**கொழும்பு, ஜூலை 24**

**விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக விவசாய தொழில் முயற்சியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன்களை வழங்கும் செயல்முறை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜனாதிபதி அலுவலகத்தில் கையெழுத்திடப்பட்டுள்ளது.**

இலங்கை வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றுடன், விவசாய, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜானக தர்மகீர்த்தி இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டார்.

கடன் சலுகைக் காலம் அதிகபட்சம் 6 மாதங்கள் ஆகும். மேலும் கடன் சலுகைக் காலம் உட்பட கடன் தொகையை திருப்பிச் செலுத்தவேண்டிய அதிகபட்ச காலம் 5 வருடங்கள் ஆகும். விவசாயிகள் அல்லது விவசாய தொழில்முயற்சியாளர்கள் பெற்றுக்கொள்ளும் கடன் தொகை மற்றும் வேலைத் திட்டத்தின் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில், கடன் சலுகைக் காலம் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் ஆகியவை விவசாய நவீனமயமாக்கல் மையங்களால் தீர்மானிக்கப்படுகின்றன.


தேசிய தொழில்முனைவோர் மூலம் வர்த்தக விவசாயத்தை உருவாக்குவதே இதன் நோக்கம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# கலாசாலையில் ஆடிப்பிறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 24

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கவின்கலை மன்றத்தினர் நடத்தும் ஆடிப்பிறப்பு விழா இன்று புதன்கிழமை காலை 8.30 மணியளவில் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ச-66)




# 'கலைமுகம்' வெளிவந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 24

'கலைமுகம்' கலை இலக்கிய சமூக இதழின் 77 ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், நூல் மதிப்பீடுகள், பத்தி உட்பட பல்வேறு விடயங்களையும் தாங்கி இந்த இதழ் வெளிவந்துள்ளது. (ச)

# கணக்கெடுப்பு இம்மாதம் நிறைவு

கொழும்பு, ஜூலை 24

'அஸ்வெசும' இரண்டாம் கட்டத்தில் பயனைப் பெற்றுக் கொள்வதற்காக 4 இலட்சத்து 55 ஆயிரத்து 697 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அவற்றை மீளாய்வு செய்யும் பணிகளை இம்மாத இறுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது என்று நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்தார். அதேவேளை முதலாம் கட்டத்தில் 18 இலட்சத்து 54 ஆயிரத்து 518 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்ட போதிலும், அவர்களில் சுமார் 2 இலட்சம் பயனாளிகள் தேசிய அடையாள அட்டை இன்மை மற்றும் வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்க முடியாமையால் தமக்கான கொடுப்பனவைப்பெற்றுக்கொள்ள முடியாதுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.- (ச-இ)

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 24

அமரர் நிக்கலஸ் எட்வேட் ஞாபகார்த்தமாக வடமராட்சி உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்கம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 3 ஆம் இடத்துக்கான போட்டியும் இறுதிப் போட்டியும் இன்று புதன்கிழமை அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

3ஆம் இடத்துக்கான போட்டியில் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்லை வி.க.வும், இறுதிப்போட்டியில் டயமண்ட் வி.க.வை எதிர்த்து அண்ணாசிலையடி வி.க.வும் மோதவுள்ளன. (ச-இ)





# கனேடிய அமைப்பால் உதவிப்பொருள்கள்

உலகளாவிய 'சிறுவர்களின் நிம்மதியான உறக்கம்' எனும் தொனிப்பொருளில் கனேடிய சமூக சேவை அமைப்பின் அனுசரணையில், யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகம் மற்றும் களனி றோட்டறிக் கழகம் இணைந்து 1004 மாணவர்களுக்கு உதவிப்பொருள்கள் வழங்கும் நிகழ்வு சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

வட்டுக்கோட்டை பிரதேசத்தின் 13 பாடசாலைகளைச் சேர்ந்த பொருண்மியம் நலிவுற்று 1004 மாணவர்களுக்கு சப்பாத்து, புத்தகப்பை, நுளம்பு வலை, பாய் போன்ற பொருள்கள் கையளிக்கப்பட்டன.

அதேவேளை 9 பாடசாலைகளைச் சேர்ந்த பொருண்மியம் நலிந்த 996 மாணவர்களுக்கு இன்று புதன்கிழமை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் வைத்து இந்த உதவிப்பொருள்கள் வழங்கப்படவுள்ளன. நிகழ்வில் கனேடிய சமூக ஆர்வலர்கள், யாழ். மாவட்ட றோட்டறிக் கழகத் தலைவி நித்திலா, யாழ் மாவட்ட றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவர்களான அனுராஜ், பிரசாந் , றோட்டறிக் கழக முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன், கழக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-25,125,27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆனைக்கோட்டை தொன்மையை வரலாற்று இடமாக மாற்றுங்கள்

## யாழ்ப்பாண மரபுரிமை மைய உப தலைவர் ரவிராஜ் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 24

**யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை பகுதியில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட இடத்தை சரித்திரப் பிரசித்திபெற்ற இடமாக பிரகடனப்படுத்தவேண்டும்.**

-இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மருத்துவ பீடாதிபதியும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் உப தலைவருமாகிய மருத்துவர் சு.ரவிராஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனைக்கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வின் நிறைவு நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற பகுதிகளை சரித்திரப் பிரசித்தி பெற்ற இடமாகப் பிரகடனப்படுத்தி, அதனை சுற்றுலாத் தலமாக மாற்றும் போது எமது வரலாறுகளை பலரும் அறிந்துகொள்வார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மட்டுமல்ல ஏனைய பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அவ்விடங்களில் ஆய்வுப் பணிகளை முன்னெடுக்க அது உந்து சக்தியாக மாறும்- என்றார். (ச-20)

# மருந்தகத்தில் இறுதிக்கிரியை: விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்ப்பாணத்திலுள்ள மருந்தகத்தில் இறுதிக்கிரியைகள் நடத்தப்பட்டமை தொடர்பில் சுகாதார அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வீட்டை தனியார் மருந்தகமாகப் பதிவுசெய்து ஒருவர் நடத்தி வருகின்றார். மருந்தக உரிமையாளரின் உறவினர் உயிரிழந்த நிலையில் அவரின் இறுதிக்கிரியைகள் மருந்தகத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. உயிரிழந்தவரின் சடலத்தை மருந்தகத்தில் 2 நாள்களாக வைத்திருந்ததாகவும் குற்றஞ்சுமத்தப்படுகின்றது.

இது தொடர்பில் சுகாதார அதிகாரிகளால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதே வேளை விசாரணைக்கு அழுத்தங்களும் பிரயோகிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ. கேதீஸ்வரனை தொடர்புகொள்ள முயற்சித்த போதும் அவர் அலைபேசி அழைப்புக்கு பதிலளிக்கவில்லை. (ஒ-20-125)

# ஊழல் ஒழிப்பு மாற்றம்;

## பெண்களின் பங்களிப்பு அவசியம்

### அனந்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

தமது திறமையாலும், முயற்சியாலும் இன்று எல்லாத் துறைகளிலும் பெண்கள் சாதிக்கின்றனர். வீட்டை ஆளுகின்ற பெண்களுக்கு நாட்டை ஆளும் தகுதி இருக்கிறது. அவர்கள் அரசியலுக்குள்ளும் காலடி எடுத்து வைக்க வேண்டும் - இவ்வாறு வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

பொதுவாகப் பெண்கள் ஊழல் மோசடிக்குள் சிக்குவது இல்லை. ஊழலற்ற ஓர் அரசியல் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு பெண்கள் தேவையானவர்கள்.

எங்களுடைய தமிழ்த் தேசிய அரசியலில் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் தான் நாடாளுமன்றத்தில் இருக்கிறார்கள். அவர்களுடைய வருகை கூட 35 - 40 வீதமாகத்தான் இருக்கிறது. மக்களின் பிரச்சினைகளை நாடாளுமன்றில் மையப்படுத்திப் பேசுவதற்கு அடுத்த இளம் சந்ததிக்கு வழி விட்டுக் கொடுத்து அவர்கள் வெல்வதற்கான வாய்ப்புகளைக் கொண்டு வரவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25-159)

# சிறப்புப் பட்டிமன்றம்



புகழ்பெற்ற பட்டிமன்றப் பேச்சாளர்களான எஸ்.ராஜா மற்றும் திருமதி பாரதி பாஸ்கர் ஆகிய இருவரும் கலந்து கொண்டசொற்சமர் விவாதக்களம் தொடர்பான சிறப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை யாழ்ப்பாணம் மத்திய கலாசார நிலையத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீ சாய்முரளி பிரதம விருந்தினராகவும், தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (ஒ-66)

# அம்புலன்ஸ் சேவை நடத்தக் கோரிக்கை

கிளிநொச்சி, வன்னேரிக்குளம் மருத்துவமனைக்கென அம்புலன்ஸ் சேவை வழங்கப்படாதமையால் வன்னேரிக்குளம் கிராம மக்கள் மருத்துவ சிகிச்சைகளை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

குஞ்சுக்குளம், திக்காய், ஐயனார்புரம், இரண்டு ஏக்கர், ஆனைவிழுந்தான் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆயிரம் குடும்பங்கள் மேற்படி மருத்துவமனையை நம்பியுள்ளன. அத்துடன் வன்னேரிக்குளம் முதியோர் இல்லத்தில் 50 க்கும் மேற்பட்ட முதியவர்கள் உள்ளனர். அவர்களின் அவசர மருத்துவ சிகிச்சைக்காக அக்கராயன் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லவேண்டியுள்ளது.

எனவே வன்னேரிக்குளம் மருத்துவமனையில் அம்புலன்ஸ் சேவையை நடைமுறைப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-25-13)

# தமிழ்ப் பொதுவேட்பாளர்; தெளிவூட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 24

சமகால அரசியலும் தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பாக பொதுமக்களுக்குத் தெளிவூட்டும் நிகழ்வு ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் வவுனியாவில் இடம்பெற்றது.

இதில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவநேசன், மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் சமகால அரசியல் தொடர்பாகவும், தமிழர் தரப்பில் பொதுவேட்பாளர் அதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் உரையாற்றினர். (ச-110)


அத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பிதழ்

கடந்த 25.06.2024செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர் திருமதி

திருமணி சுந்தரராசன்



அவர்களின் இறைபதப்பேறு குறித்த ஆத்ம சாந்திப் பிரார்த்தனை எதிர்வரும் (25.07.2024) வியாழக்கிழமை பகல் 11.00 மணியளவில் மருதனார்மடம் சமுத்திரமஹால் மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சமுத்திரமஹால்,
மருதனார்மடம்,
சுன்னாகம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்
கணவன் - 077 331 6350
மகன் - 077 547 1513


# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு இழப்பீட்டுக்கான பதிவுகள்



காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு இரண்டு இலட்சம் ரூபா உதவித்தொகை வழங்கும் பொருட்டு கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் 30 பேருக்கான பதிவுகள் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுந்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இழப்பீட்டு அலுவலகத்தால் பொருளாதார நெருக்கடியில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் 2 ஆயிரத்து 500 பேருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலய நகைத் திருட்டு: மேலும் 22பவுண் மீட்பு



யாழ்ப்பாணம், ஜுலை 24

புளியங்கூடல் இந்தன் முத்துவிநாயகர் கோவில் நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் கைதாகிய பூசகரிடம் இருந்து மேலும் 22 பவுண் நகைகளும் பணமும் கைப்பற்றப்பட்டன.

ஆலயத்துக்குள் பாதுகாப்பாகப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த 62 பவுண் நகைகள் மற்றும் 8 இலட்சம் ரூபா பணம் என்பன காணாமல் போயிருந்தன. இது தொடர்பான விசாரணைகளில் 28 வயதுடைய பூசகர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் ஆலயத் திருவிழாவின்போது உதவிப் பூசகராகச் செயற்பட்டிருந்தார்.

சந்தேகநபரிடம் இருந்து 40 பவுண் நகைகள் மீட்கப்பட்டதுடன், ஏனைய நகைகள் வங்கியில் அடகு வைக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டிருந்தது. இந்நிலையில் பொலிஸாரின் மேலதிக விசாரணைகளில் திருடப்பட்ட நகைகள் அனைத்தும் மீட்கப்பட்டுள்ளன. (அ-ஒ-26)

## பொது...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வழமைபோன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய இராணுவம், விமானப்படை மற்றும் கடற்படையின் சகல உறுப்பினர்களும் நாட்டின் அனைத்து நிர்வாக மாவட்டங்களிலும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுவதற்காக நேற்றுமுன்தினம் அழைக்கப்பட்டுள்ளனர்.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட பின்னர் இவ்வாறான வர்த்தமானி காலத்துக்காலம் ஜனாதிபதியின் ஒப்பத்துடன் வெளியாகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## நாடாளுமன்றம்...

முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் முன்னாள் ஆணைக்குழு உறுப்பினர் மொஹமட் உள்ளிட்ட குழுவினர் உதயன் அலுவலகத்துக்கு நேற்று மாலை வருகை தந்தனர். உதயன் குழுமத்தின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன் மற்றும் உதயன் பத்திரிகையின் ஆசிரிய பீடத்தினரையும் சந்தித்தனர்.

இதன் பின்னர் ஊடகங்களைச் சந்தித்த தேசப்பிரிய மற்றும் மொஹமட் ஆகியோர் மேலும் தெரிவித்ததாவது:-

"22ஆம் திருத்தம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. அது தொடர்பில் நீதிமன்றத்துக்கு யாராவது சென்றால், நீதிமன்றம் தனது நிலைப்பாட்டை சபாநாயகருக்கு அறிவிக்கும். அதற்கு அமைவாக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை, சாதாரண பெரும்பான்மை அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பொது வாக்கெடுப்பு என்று ஏதாவது ஒரு நிலைப்பாட்டை நீதிமன்றம் அறிவிக்கலாம். எனவே அது தொடர்பான பொது வாக்கெடுப்பு நடத்தவேண்டிய நிலை ஏற்பட்டாலும் ஜனாதிபதித் தேர்தலைப் பாதிக்காது. ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி தொடர்பான வர்த்தமானி இந்த வார இறுதிக்குள் வெளிவரும் என்று நம்புகின்றோம்" - என்றனர்.

அதேபோன்று நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் எனச் சொல்லப்படுகின்றதே. இது ஜனாதிபதித் தேர்தலை பாதிக்குமா என ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர்கள், ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு அதன் தேர்தல் முடிவுகள் வெளியாகும் வரையில் தற்போதைய ஜனாதிபதியே பதவியில் இருப்பார். தற்போதைய நாடாளுமன்றத்தை எப்போதும் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. அவர் நாடாளுமன்றத்தைக் கலைத்தாலும் ஜனாதிபதித் தேர்தல் உரிய திகதியில் நடக்கும். ஜனாதிபதியால் குறித்தொதுக்கப்படும் நாளில் நாடாளுமன்றத் தேர்தலும் நடத்தப்படும்.

1988 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. அதில் பிரேமதாஸ மற்றும் சிறிமா ஆகியோர் போட்டியாளர்கள். ஜே.ஆர். அப்போதைய ஜனாதிபதி. அன்றைய ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த சூழலில், நாடாளுமன்றத்தைக் கலைக்கும் வர்த்தமானியை ஜே.ஆர். வெளியிட்டிருந்தார்.

எனவே நாடாளுமன்றத்தை எப்போது வேண்டுமானாலும் ஜனாதிபதி கலைக்கலாம். அதனால் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பாதிப்பு ஏற்படாது. ஆனால் தேர்தல்கள் ஆணைக்குழு இரண்டு தேர்தலுக்குமான திகதிகள் அண்மித்ததாக இருந்தால் சிரமங்களை எதிர்கொள்ளும் - என்றார். (அ-ஒ-5-125)

## தமிழ்...

பிரஜை என்ற ரீதியில் மன்னிப்புக் கோருகிறேன் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை திருத்தம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொவிட் பெருந்தொற்றுத் தாக்கத்தின் போது உயிரிழந்த முஸ்லிம் சமூகத்தினரது ஜனாஸாக்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்யப்பட்டன. இவ்விடயம் குறித்து நீர்ப்பாசனத்துறை அமைச்சு அறிவியல் ரீதியில் முன்னெடுத்த ஆய்வு அறிக்கைக்கு அமைய வெளிவிவகாரத் துறை அமைச்சர் அலி சப்ரி, நீர்வழங்கல் அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் நான் உட்பட ஒன்றிணைந்து கூட்டாக சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முஸ்லிம் சமூகத்தின் ஜனாஸாக்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்யப்பட்டமைக்கு மன்னிப்புக் கோரும் வகையில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே முஸ்லிம் சமூகத்திடம் மன்னிப்புக் கோருகிறோம். அத்துடன் கவலையடைகிறோம்.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி இலங்கைக்கு கரும் புள்ளியாகக் காணப்படுகிறது. 41வருடங்களுக்கு முன்னர் நேர்ந்த சம்பவங்கள் பெரிய விளைவுகளை ஏற்படுத்தின. அக்காலப் பகுதியில் நாங்கள் அரசியலில் ஈடுபடவில்லை. இருப்பினும் நாட்டுப் பிரஜை என்ற ரீதியில் தமிழர்களிடம் மன்னிப்புக் கோருகிறேன் - என்றார். (அ-ஒ-இ)

## வாள்களுடன்...

செய்துள்ளதுடன், ஒருவர் தப்பிச் சென்ற நிலையில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் அவர்களின் வீடுகளிலிருந்தும் வாள்கள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர். (அ-ஒ-23)

## எல்லை...

அத்துடன் இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்று கச்சதீவுக்கு அண்மையாக மீன்பிடித்துக்கொண்டிருந்த படகுகளை கடற்படையினர் மோதியதாக தமிழக மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (அ-ஒ-56)

## பெரமுனவின்...

தீர்மானித்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இராஜாங்க அமைச்சரொருவரின் இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இரகசிய கலந்துரையாடலொன்றின்போதே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

பெரும்பான்மையினரின் கருத்துக்கு எதிராகச் சென்று, கட்சி வேறு வேட்பாளரை நியமித்தால் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க மேற்படி 12 தலைவர்களும் தீர்மானித்துள்ளனர்.

அதற்காக அவர்கள் தற்போது நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 75 மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுள்ளனர் எனவும் தெரியவருகின்றது. (அ-ஒ-44)

## தீயில்...

வீட்டின் ஓட்டுக் கூரையில் முதலில் தீப்பற்றியுள்ளது. பின்னர் வீட்டின் மேற்பகுதியிலும் தீப்பற்றியுள்ளது. இதனையடுத்து கிராமத்து இளைஞர்கள் ஒன்று சேர்ந்து தீயை மிகுந்த சிரமத்துக்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதேவேளை - தீ பரவ ஆரம்பித்ததும் மின்சாரசபைக்கு அறிவித்து மின்சாரத்தைத் துண்டித்துள்ளனர்.

தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் வீட்டின் கூரையின் சிறு பகுதி வீழ்ந்து காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ஒ-19)

## ஜனாதிபதித்...

தேர்தல்கள் ஆணைக்குழுவின் முக்கியமான கூட்டம் நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலுக்கான வர்த்தமானி வெளியிடப்படவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் ஓகஸ்ட் 15ஆம் திகதியும், ஜனாதிபதித் தேர்தல் செப்ரெம்பர் 21ஆம் திகதியும் இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகின்றது. (அ-ஒ-5)

## கறுப்பு...

முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன் தலைமையில், காரைநகர் - வலந்தலை, மடத்துகரை முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் நேற்றுமாலை நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

உயிரிழந்த உறவுகளுக்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு, பூத்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

காரைநகர் பிரதேசசபையின் முன்னாள் உப தவிசாளர் ஆ.விஜயராஜா, பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்களான தவமணி, ஜெயந்தன், நாகராஜா எனப் பலர் பங்கேற்றனர்.

இதேவேளை - கிளிநொச்சி மாவட்டத்தில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் ஏற்பாட்டில், கட்சியின் மாவட்டப் பணிமனையான அறிவகத்தில் கறுப்பு ஜுலை நினைவேந்தல் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

இந் நினைவேந்தலின் போது, அண்மையில் மறைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெருந்தலைவர் இரா.சம்பந்தனுக்கும், தமிழீழ இராணுவ இயக்கத்தின் தலைவரும், ஈழப்போராட்டத்தின் முன்னோடிகளுள் ஒருவருமான தம்பாப்பிள்ளை மகேஸ்வரனுக்கும் (பனாகொட மகேஸ்வரன்) அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-113-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெருப்புக்கும் அஞ்சாத ரணில் தேர்தலுக்கும் அஞ்சமாட்டார்

## ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் பெருமிதம்

**கொழும்பு, ஜூலை 24**

**தனது வீட்டைக் கொளுத்தியபோதும் எதற்கும் அஞ்சாது நாட்டைப் பொறுப் பேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலுக்கு அஞ்சும் நபர் கிடையாது.**

தேர்தலெல்லாம் அவருக்கு ஒரு பொருட்டே அல்ல என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரான ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

தற்போதைய அரசின் வேலைத்திட்டம் மற்றும் முன்னோக்கிச் செல்லும் வழிகளை மக்களுக்கு அறிவிக்கும் வகையில் 'ஒன்றிணைந்து வெல்வோம்' எனும் தொனிப்பொருளிலான கலந்துரையாடல் கம்பஹா மாவட்டம் கடவத்தையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போது உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலுக்கு அஞ்சுகின்றாராம், அதனால்தான் 22 ஆவது திருத்தச்சட்ட வரைவு கொண்டுவரப் படுகின்றது என எதிரணிகள் பரப்புரை செய்கின்றன.

நாட்டில் வரிசை யுகம் உருவாகி, மக்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டபோது துணிவுடன் சவாலை எதிர்கொண்ட தலைவர்தான் ரணில் விக்கிரமசிங்க. நாட்டின் நலன்கருதி அவருடன் கரம்கோர்க்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன் - என்றார். (ஒ-25,44)


# தேவை

**வேலைக்கு ஆட்கள் தேவை.**

(cs 55744) (N-1)

**077 668 1670**

# வீடு வாடகைக்கு

கைதடி - மானிப்பாய் பிரதான வீதியில் (உடுவில் மகளிர் கல்லூரிக்கும் மருதனார்மடம் சந்திக்கும் இடையில்) அமைந்துள்ள சகலவசதிகளுடன்கூடிய மேல்மாடி வீடு (3000 சதுர அடி) வாடகைக்குண்டு. வாகன தரிப்பிட வசதியும் உண்டு. அலுவலக பயன்பாட்டிற்கு உகந்தது.

(cs 55741) (N-1)

077 115 5909
Whatsapp: + 9477 1155 909

# வங்கி மீதி வசதி (SHOW MONEY)

**சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்**

தொடர்புகளுக்கு:

**074 173 7684**

CS/9881 J-1


## திடீரென மயங்கியவர் உயிரிழப்பு

வீதியால் சென்று கொண்டிருந்த குடும்பத் தலைவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உரும்பிராயில் இடம்பெற்றுள்ளது.

மூளாய் வீதி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பரமசாமி சிவலிங்கம் (வயது-56) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

உரும்பிராயில் அமைந்துள்ள தனது சகோதரியின் வீட்டுக்குச் சென்று விட்டு மோட்டார் சைக்கிளுக்குக் காற்று நிரப்புவதற்காக உரும்பிராய் வேம்பன் வீதியால் சென்று கொண்டிருந்த போதே அவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

மாரடைப்புக் காரணமாகவே இறப்பு சம்பவித்துள்ளதாக சடலம் மீதான உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (அ-ஒ-66)

## சிறுவர் வறுமை
## ஆபத்தான சூழற்சி
## தீர்க்க நடவடிக்கை எடுப்போம் என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, ஜூலை 24

வறுமை காரணமாக பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லாமை, குறிப்பிட்ட கல்வியைப் பெறாமை, மற்றும் பரீட்சைகளில் தோற்றாமை, தேர்ச்சி பெறாமை போன்ற காரணங்களால் வேலை கிடைக்காது வறுமை நிலையை எதிர்கொண்டுள்ளனர். இது சிறுவர் வறுமை தொடர்பான ஆபத்தான சூழற்சியாகும். -இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் சிறுவர் வறுமையை ஒழிப்பதற்கான தேசிய வேலைத்திட்டத்தை ஆரம்பிப்போம். தேசிய சிறுவர் வறுமையை ஒழிக்கும் வேலைத்திட்டத்தின் ஊடாக இந்நாட்டின் அனைத்துப் பிள்ளைகளையும் தனது சொந்தப் பிள்ளைகளாகக் கருதிச் செயற்பட வேண்டும். இந்த மரணப் பொறிகளில் இருந்து அவர்களை மீட்பதற்கான தலைமைத்துவத்தை நான் வழங்குவேன். சிறுவர் வறுமை எனும் கொடிய சூழற்சி நாட்டிலிருந்து ஒழிக்கப் படவேண்டும் - என்றார். (ஒ-இ)

# மரண அறிவித்தல்

# பொன்னையா தருமலிங்கம் (தருமு)

## (முன்னாள், வேலைகள் மேற்பார்வையாளர் - ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திசபை உடவளவை)



தோற்றம் 05.05.1936 மறைவு 22.07.2024

உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா தருமலிங்கம் நேற்றுமுன்தினம் (22.07.2024) திங்கட்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா, தெய்வானைப் பிள்ளை (சீதைப்பிள்ளை) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், கரம்பொனைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பூமணி தம்பதியரின் மருமகனும், ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், சுதர்மன் (சுவிஸ்), சசிகரன் (லண்டன்), கிசோக்குமார் (லண்டன்), கார்த்திகா (லண்டன்), பத்மராஜன் (764, சிற்றூர்தி உரிமையாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிர்மலா (சுவிஸ்), அன்பரசி (லண்டன்), தமயந்தி (லண்டன்), ஜெகதாஸ் (லண்டன்), தாட்சாயினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிதுஷன் - நடஷா, சஜீவனா, கற்றீனா, ஜனிஷ், அக்ஷயன், அருஷ்கா, மதுமிலா, கர்மிசா, துசிந்தன், சஞ்சீவ், பிருந்தன், யருஷ், வலக்ஷன், நிவோஷன், தருக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மீனாட்சி, மகேஸ்வரி, அமுதமலர், இராஜேஸ்வரி, அற்புதராசா மற்றும் துரைராசா, துதிமலர், விக்னேஸ்வரன், இந்திரதாஸ், காசிலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, சரவணமுத்து, கந்தசாமி, வேலாயுதம் மற்றும் குமாரசாமி, இராஜமலர், நாகேஸ்வரி, ரஞ்சினி, சிவானந்தி, யோகமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**5 ஆம் ஒழுங்கை,**
**பலாலி வீதி,**
**உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.**

(CS/55742) N-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.07. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org